ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு எண்: 226 / 1992)




சத்திரப்பட்டி சாலை,

வேதபுரீ, தேனி. - 625 531






ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

### அறத்துப்பால்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

**பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்**



நாள் :
23, ஐப்பசி 2025

Date:
09, November 2025

www.vedaneri.org

வகுப்பு 12

அதிகாரம் : 7

# இல்லறவியல்

## புதல்வரைப் பெறுதல்

நல்ல குழந்தைகளைப் பெறுதல்

குழந்தைகளை நல்லவர்களாக வளர்த்தல்



**குறள்: 1**

குழந்தைப் பேற்றினது சிறப்பு - 1. நல்ல அறிவுடைய மக்களைப் பெறுதல்.

**குறள்கள்: 2 & 3**

குழந்தைப் பேற்றினது சிறப்பு - 2. நல்ல பண்புகளுடைய மக்களைப் பெறுதல்.

மறுமைப்பயன் - பாபம் போகும்.

**குறள்கள்: 4 - 6**

இம்மைப்பயன் - இன்பம்

**குறள்: 7**

தந்தையின் கடமை - சான்றோனாக்குவது.


**குறள்: 8**

ஸமூகப் பயன் - அறிவுடையார் மகிழ்வர்.

**குறள்: 9 & 10**

புதல்வரின் கடமை - சான்றோனாவது.





01

## பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை அறிவறிந்த மக்கட்பே றல்ல பிற.

ஒருவன் பெறும் செல்வங்களுள் - அறியவேண்டியவற்றை அறிதற்குரிய - அறிவுடைய நல்ல குழந்தைகளைப் பெறுவது அல்லாமல் பிறவற்றை சிறந்த செல்வமாக நாம் கருதுவதில்லை.

பேறு - செல்வம்.

அறிவறிந்த மக்கள் - அறிய வேண்டிய சாஸ்த்ர நூல்களை முறையாகக் கற்ற புதல்வர்கள்.

01

புகழ், கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் என்பவை பதினாறு பேறுகள் ஆகும்.

தர்ப்பணம், சிராத்தம் முதலான பித்ரு கடனை நம்பிக்கையோடு செய்வது புத்திரனின் கடமையாகும். ஆகவே, மறுமைக்கும் பயன்படும் நல்ல பேறு புத்திரனே ஆகும்.

நல்ல அறிவுடைய குழந்தைகளை விடச் சிறந்த செல்வமில்லை.

இதனால் எல்லாப் பேறுகளையும் விட சிறந்தது அறிவுடைய குழந்தைப் பேறு என்று குழந்தைப் பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

02

# எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
# பண்புடை மக்கள் பெறின்.

பிறரால் பழிக்கப்படாத நல்ல குணங்களையுடைய புதல்வரைப் பெற்றிருந்தால், (வினைப்பயனாகப் தோன்றும் அடுத்தடுத்த) ஏழுவகையான பிறவிகளிலும் பாவங்கள் ஒருவனை வந்து சேராது.

பண்பு எனும் காரணப்பெயர் கார்யத்தைக் குறிப்பதாக நிற்கிறது.

நற்குணங்கள் இருப்பவனே நற்செயல்களைச் செய்வான்.

பண்புடைய மக்கள் பெற்றோர்களின் பாபங்குறையும் பொருட்டு செய்கின்ற தானதர்மங்களின் புண்யப் பலன் பித்ருக்களான முன்னோர்களைச் சென்று சேருமாதலால் அவர்கள் பாவங்களில் இருந்து விடுபடுவர்.

பெற்றோர்களுக்காக புதல்வர் செய்யும் நற்செயல் - ச்ராத்தம், கோதானம், அந்நதானம் போன்றவை.

02

**பழிபிறங்கா மக்கள் - பிறரால் பழிக்கப்படாத - பிறரால் பழிக்கப்படும் தீய பண்புகள் இல்லாத நற்பண்புள்ள புதல்வர்கள்.**

**நற்பண்புகள் நல்லறிவின் பாற்பட்டவை. நற்பண்புகளை உண்டு பண்ணும் நல்லறிவைக் குழந்தைகளுக்குக் கொடுப்பது - கற்றுத்தருவது - பெற்றோரின் கடமையாகும்.**

**நல்ல குழந்தைகளைப் பெற்றவன் எழுவகைப் பிறப்புகளிலும் துன்பமடைய மாட்டான்.**

**எழுவகைப் பிறப்புகள்:**
**தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன.**

**ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானுட**
**நீர்பறவை நாற்காலோர் பப்பத்தாம் - சீரிய**
**பந்தமாம் தேவர் பதினால் அயன்படைத்த**
**அந்தமில் சீர்த் தாவரநா லைந்து.**

**நானிலநீர் பைமுட்டை நால்வகை யோனிசுரர்**
**மானுட நீர் வாழ்பறவை மாகிருமி - ஞானமிலா**
**மண்பட்ட தாவரமென்று ஏழாய் வரும்பவநூறு**
**எண்பத்து நான்காயிரம்.**

**ஊர்ந்து வாழும் உயிர்வகை - பதினொரு லக்ஷம்**
**மனிதப்பிறவி வகை - ஒன்பது லக்ஷம்**
**நீர்வாழ் வகை - பத்து லக்ஷம்**
**பறவை வகை - பத்து லக்ஷம்**
**விலங்கு வகை - பத்து லக்ஷம்**
**தேவர் வகை - பதினான்கு லக்ஷம்**
**தாவர வகை - இருபது லக்ஷம்**

**மொத்தம் 84 லக்ஷம் உயிர்வகை.**









03

# தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
# தம்தம் வினையால் வரும்.

தன்னுடைய குழந்தைகளைத் தம்முடைய செல்வம் என்று சொல்லுவர் அறிஞர்; அப்புதல்வர் சேர்க்கும் பொருள் தம்மைக் (பித்ருக்களைக்) குறித்து அவர் செய்யும் நல்வினையினாலே தம்மிடத்து வரும் என்பதால்.

தம்பொருள் - தம்முடைய செல்வம்

அவர்பொருள் - குழந்தைகள் சேர்த்த பொருள்

தந்தம் வினை - தம்மைக் குறித்த வினை (பெற்றோரைக் குறித்து புதல்வன் செய்யும் நல்வினை)

வரும் - பாபம் தீர்க்கும் புண்ணியமாக வந்து சேரும்.

04

## அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
## சிறுகை அளாவிய கூழ்.

(தாய்தந்தையருக்கு) தம்முடைய குழந்தையினது சிறிய கையினால் அளையப்பட்ட சோறானது அமிர்தத்தை விட மிக்க இனிய சுவையுடையதாகும்.



கூழ் - சோறு

இம்மைப் பயன் - சுவையின்பம்.


05

## மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
## சொல்கேட்டல் இன்பம் செவிக்கு.

குழந்தையினது உடலைத் தொடுதல் தாய் தந்தையரின் உடலுக்கு இன்பத்தைத் தருவதாகும். அக்குழந்தையின் சொற்களைக் கேட்பது அவரது காதுக்கு இன்பமாகும்.

சொல் - மழலைச்சொல்லும் நூற்களைக் கற்று அறிவுடையவராகச் சொல்லும் சொல்லும்.

இம்மைப் பயன் - ஸ்பர்ச சுகம், செவியின்பம்.



06

# குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
# மழலைச்சொல் கேளா தவர்.

தமது குழந்தையின் மழலைச் சொற்களைக் கேட்காதவர்களே குழலின் இசை இனியது, வீணையின் இசை இனியது என்று சொல்லுவர்.




குழல் - புல்லாங்குழல். யாழ் = வீணை.

இம்மைப் பயன் - செவியின்பம், மனதிற்கும் இன்பம்.

இவை மூன்று பாட்டாலும் இம்மைப்பயன் கூறப்பட்டது.

07

# தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்.

ஒரு தந்தையானவர் தம் மகனுக்குச் செய்யும் நன்மையாவது (அவனைக்) கற்றவரது சபையில் எல்லோருக்கும் மேம்பட்டவனாக இருக்குமாறு - கல்வியறிவுடையனாக - ஆக்குதல் ஆகும்.

அறிவு கொடாமல் பொருளுடையவனாக மட்டும் ஆக்குதல் துன்பத்தைத் தரும் என்பதால் அது நன்மையைத் தருவது ஆகாது.

அறிவெனப்படுவது தீயது விலக்கி நல்லது அறியும் விவேகம். அது இல்லாத பொருளை மையமாகக் கொண்ட அறிவும் துன்பத்தையே தரும். சான்றோர்கள் பாராட்டும் நல்விவேகம் உடையவனாக்குவதே இன்பத்தைத் தரும்.

இதனால் தந்தையின் கடமை கூறப்பட்டது

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே. - புறநானூறு.

08

# தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
# மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.

தன்னுடைய குழந்தைகள் அறிவுடன் இருத்தல் என்பது இப்பெரும்பூமியில் வாழும் சான்றோர்களுக்கெல்லாம் தமது (பெற்றோரது) இன்பத்தைவிட இன்பமானதாகும்.

அறிவு - கல்வியறிவு.
மன்னுயிர் - உலக உயிர்கள். இங்கு சான்றோர்கள்.

சான்றோர்கள் சமூகநலனை விரும்புபவர்கள். அறிவுடைய அடுத்த தலைமுறையைக் காணும்பொழுது பெருமகிழ்ச்சி அடைவார்கள்.

இதனால் தாய்தந்தையரினும் அறிவுடையார் பெரிதும் மகிழ்வர் எனும் சமூக நன்மை கூறப்பட்டது.

09

## ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்.

தன் மகனை அறிஞர்கள் ’சான்றோன்’ எனப் புகழக் கேட்கும் தாயானவள் அவனைப் பெற்ற பொழுதில் அடைந்த மகிழ்ச்சியைவிட அதிகமான மகிழ்ச்சியை அடைவாள்.

தாயின் மகிழ்ச்சிக்கு அளவில்லையாதலால் பிரித்துக் கூறப்பட்டது.

(தன் தாய் பெரிதும் மகிழும்படியாகக் கல்வி கேள்விகளால் சிறந்து சான்றோர்களால் சான்றோன் எனப் புகழப்படும்படியாக அறிவுடைய மனிதனாவது மகனின் கடமையாகும்.)

10

# மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை என்னோற்றான் கொல்லெனும் சொல்.

தன் தந்தைக்கு மகன் செய்யும் ப்ரதிபலனாவது (அவனது அறிவையும், ஒழுக்கத்தையும் கண்டவர்) இவனுடைய தந்தை இப்படிப்பட்ட புதல்வனைப் பெறுவதற்கு 'என்ன தவம் செய்தாரோ' என்று சொல்லும்படியாக நடந்து கொள்வதாகும்.

இதனால் புதல்வன் தந்தைக்குச் செய்யும் கடன் சொல்லப்பட்டது.

(தவம் - பெற்றோருக்கு புகழையும் இன்பத்தையும் சேர்க்கும்படியான ஸத்புத்திரனைப் பெறுவது முந்திய பிறவிகளிலோ இப்பிறவியிலோ ஒருவன் செய்த தவத்தின் - புண்ணிய காரியங்களின் - விளைவு ஆகும். நல்ல பெற்றோர் அமைவதும் அப்படியே. மனித உடலை எடுத்திருக்கின்ற ஜீவன் இந்த உண்மையைப் புரிந்து கொண்டு வாழ்க்கையைத் தவமாக்கிக் கொள்ள வேண்டும்.)

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்- தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)

1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil



2. Instagram - swami_om_karananda
3. Facebook - Swami omkarananda
4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam
5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam

94430 51910 www.vedaneri.org vedapuricamps@gmail.com